நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
06.01.2024

# திருவண்ணாமலை ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

**மதுரை, ஜன. 5:** விவசாயிகள் மீது நடவடிக்கை எடுத்த திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பின் தேசியச் செயலர் ஹென்றி திபேன் இதுதொடர்பாக வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

திருவண்ணாமலை மேல்மா சிப்காட் பணிக்காக விளை நிலங்களை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடிய 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மீது போலீஸார் பொய் வழக்குகளைப் பதிவு செய்து, 7 விவசாயிகள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். இதற்கு மனித உரிமை அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து, 6 பேர் மீதான குண்டர் தடுப்புச் சட்ட வழக்கை தமிழக அரசு ரத்து செய்வதாக அறிவித்தது.

ஆனால், கடந்த அதிமுக ஆட்சியில் 8 வழிச் சாலை திட்டத்துக்கு எதிராகப் போராடிய விவசாயி அருள் மீதான குண்டர் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்கு விசாரணை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது.

அப்போது அறிவித்தபடி, அருள் மீதான குண்டர் தடுப்புச் சட்ட வழக்கை தமிழக அரசு வெள்ளிக்கிழமை திரும்பப் பெற்றது. இதற்காக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு எங்கள் கூட்டமைப்பு சார்பில் நன்றி.

உரிமைக்காக போராடிய விவசாயிகள் மீதான தவறான நடவடிக்கை எடுக்கக் காரணமாக இருந்த திருவண்ணமாலை மாவட்ட ஆட்சியர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பொய் வழக்குகள் பதிவு செய்யக் காரணமாக இருந்த காவல் துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து விவசாயிகள் மீதான வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்றார் அவர்.